SACRED HEART COLLEGE (AUTONOMOUS)
Tirupattur - 635 601
Tamil Nadu, India.
புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
Vol: 08, Issue : Special
SACRED HEART RESEARCH PUBLICATIONS
March 2025
ISSN: 2456-821X

# 26. TML1165 - நாலடியார் சுட்டும் பெண்களின் நிலைப்பாடு

முனைவர் த. லதா
உதவிப்பேராசிரியர்
தமிழ்த்துறை, தொன்போஸ்கோ கல்லூரி, ஏலகிரி மலை
திருப்பத்தூர் மாவட்டம்.635851

**ஆய்வுச் சுருக்கம்**

*உலகம் தோன்றிய நாள் முதல் ஓரறிவு முதல் ஆறறிவு வரை உயிரினங்கள் தோன்றின. அதில் ஆணும் பெண்ணும் இணைந்து இருப்பதால் தான் உலகில் உயிரினங்கள் அழியாமல் காப்பாற்றப்பட்டு வருகிறது. ஆணில் ஆண்மையும், வீரமும் அமைந்துள்ளதுபோல், பெண்ணில் பெண்மையும், அழகும், சாந்தமும் அமைந்துள்ளன. ஆண் பெண்மையையும், பெண் ஆண்மையையும் விரும்பி ஒன்றுபட்டு வாழ்வியலில் இறங்குவர். ஆணின்பின் பெண்ணும், பெண்ணின்முன் ஆணும் சேர்ந்து ஓடுவதுதான் வாழ்க்கையாகும். ஆணும், பெண்ணும் இந்த ஓட்டத்தில் வெற்றிவாகை சூட 'ஒருத்திக்கு ஒருவன், ஒருவனுக்கு ஒருத்தி' என்ற தாரகமந்திரத்தைக் கடைப்பிடிப்பர். அதில் நிச்சயம் வெற்றியும் காண்கின்றனர். இதில் பெண்களுக்கென்று சில பண்பாடுகள் இலக்கணங்கள் கட்டுப்பாடுகள் காணப் டுகின்றன. இந்த கட்டமைப்பு சங்க காலம் முதல் தற்காலம் வரை போற்றி வருகின்றனர். துறவறத்தினைக் கடுமையாகக் கடைப் பிடித்த போற்றிய சமண மதம் ஓங்கிய காலத்தில் கூட பெண்கள் எவ்வாறு தன் நடை முறையில் இருந்து வழுவாமல் வாழ்ந்து வந்தனர் என்பதைக் குறித்து சமண முனிவர்கள் இயற்றிய நாலடியாரில் காண்போம்*

**திறவுச்சொற்கள்**

*பெறுநசை , புலவி, மேலுரை , கட்கினியாள், அட்டில்*

**முன்னுரை**

*சங்க காலத்தில் பெண்கள் காதலும் வீரமும் பெற்றவர்களாகவே காணமுடிகிறது. ஆண்களுக்கு நிகராக பெண்கள் திகழந்ததை காண முடிகின்றது. சங்க காலம் மறைந்து சங்கம் மருவிய காலம் தோன்றிற்று. அக்காலத்தில் பௌத்தமும் சமண மதமும் பெற்ற செல்வாக்கினால் மக்களின் வாழ்வியலில் மிகப் பெறுத்த மாற்றம் ஏற்பட்டது. சமண முனிவர்கள் இயற்றிய நாலடியாரில் பெண்களின் குணங்களைப் பற்றியும் திருமணமான பெண்கள் எவ்வாறு திகழ வேண்டும், கற்பு நெறிக் குறித்தும் வறுமை சூழந்த போதும் செம்மையாக வாழந்த பெண்களைப் பற்றியும், இழிவான பெண்கள் யார் யார் என்பதைப் பற்றி நாலடியார் எவ்வாறு பேசுகிறது எனபதைப் பற்றி இவவாய்வுக் கட்டுரையில் காண்போம்.*

**கற்பு நெறி**

*தலைவனும் தலைவியும் பல்லோர் அறியத் திருமணம் புரிந்துகொண்டு வாழ்க்கை நடத்துவதே இல்லற நெறி ஆகும். இல்லற நெறியைத் தொல்காப்பியர்,*

மறைவெளிப் படுதலும் தமிரிற் பெறுதலும்
இவை முதலாகிய இயல்நெறி பிழையாது
மலிவும் புலவியும் ஊடலும் உணர்வும்
பிரிவோடு புணர்ந்து கற்பெனப்படுமே| (இளம்பூரணர் உரை–3–நூற்பா)

*எனத் தொல்காப்பியம் உணர்த்துகின்றது. மணவினை நிறைவு பெற்றபின் மலிவு, புலவி, ஊடல், உணர்வு, பிரிவு ஆகிய ஐந்து கூறுகளும் அடங்கிய பகுதியே கற்பென வழங்கப் பெறுவதாகும்.*

''செல்லாமை உண்டேல் எனக்குரை மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க்கு உரை'' (திருக்குறள் 1151)

*என்று வள்ளுவரும் இல்லற நெறிக்கு இலக்கணம் கூறுகின்றார்.*

*நாலடியார் காட்டும் கற்புடை மகளிர் நிலை கற்புடைய பெண்டியரையே சமூகமும், சான்றோரும், இலக்கியமும் போற்றியுள்ளன. கற்புடை பெண்டிரே, கணவனைத் தவிர பிற ஆடவரைத் திரும்பி பார்க்காதப்பெண்களையே சமண முனிவர்களும் போற்றியுள்ளனர். கற்புநெறியையே சிறந்த வாழ்வியல் சிந்தனையாக, நெறியாகப் பாடியுள்ளனர். அதே நேரத்தில் பொது மகளிரின் இயல்பைக் கூறி கடிந்துரைத்து அவர் செயலையும் போலி அன்பையும் எடுத்துரைத்துள்ளனர்.*

**கற்புடை பெண்டிரின் குணமும் இயல்பும்**

*கற்பொழுக்கத்தையுடைய இந்திராணியைப் போன்ற பெரும் புகழையுடைய மங்கையாராயினும், தன்னை நாடிவந்து இன்பம் அனுபவிக்க விரும்பும் ஆடவர். தன்பின் வந்து நிற்கும் போது கூட அவர்களைப் பொருட்டாக நினையாது பிற ஆடவர்க்கு இடம் கொடாதவளே, நல்ல குணமுடைய பெண்களையே கணவனுக்கும் பொருத்தமான துணையாவாள் என்று நாலடியார் கூறுகிறது. இதனை,*

''அரும்பெறற் கற்பின் அயிராணி யன்ன
பெரும்பெயர்ப் பெண்டி ரெனினும் – விரும்பிப்
பெறுநசையால் பின்னிற்பா ரின்மையே பேணும்
நறுநுதலாள் நன்மைத் துணை'' (நாலடி.381)

*என்னும் இப்பாடலால் அறிய முடிகிறது. கற்புடை பெண்டிரின் குணம், தான் எவ்வளவு அழகாலும், செல்வத்தாலும் உயர்ந்தவராயினும் தன்னை நாடி வரும் பிற ஆடவரைத் திரும்பி விரும்பாதவளே சிறந்தவள் எனக் குறிப்பிடுவதனை அறிய முடிகிறது.*

*மேலும் கற்பினை உடைய மனைவி*

''நாலாறும் ஆறாய் நனிசிறிதாய் எப்புறனும்
மேலாறு மேலுறை சோரினும் – மேலாய
வல்லாளாய் வாழும்ஊர் தற்புகழு மாண்கற்பின்
இல்லாள் அமர்ந்ததே இல்'' (நாலடி.383)

*இவ்வாறு இருக்க வேண்டுமென இப்பாடல் எடுத்துரைக்கிறது. வீடு என்பது, நான்கு பக்கங்களிலும் இடிந்து வழியுடையதாயும், மிகவும் சிறியதாயும், எல்லாப் பக்கங்களிலும் மேல் கூரையினின்று மழை நீர் ஒழுகும் வறிய நிலை வந்தபோதும், தன் கடமைகளைச் செவ்வனே செய்ய வல்லவளாய்த் தான் வாழும் ஊரினர் தன்னைப் புகழும் மாட்சிமைப்பட்ட கற்பினையுடைய மனைவியை உடையதாயும் அது விளங்குதல் வேண்டும் என்று எடுத்துரைப்பதைக் காணமுடிகிறது.*

''சிறந்த பெண்மைக்கான இலக்கணம்,
கற்புமிக்க சிறந்த பெண் இல்வாழ்வில்''

*பார்வைக்கு இனிய இயற்கை அழகுடையவளாயும், தன் கணவன் விரும்பும்படி தன்னை அலங்கரித்துக் கொள்பவளாயும், அச்சம் உடையவளாயும் பிறரிடம் நாண் கொள்ளும் குணமுடையவளாயும், கணவனிடத்து அஞ்சி ஒழுகுபவளாயும், தக்கச் சமயத்தை அறிந்து கணவனுடன் கூடிப் பின்கணவனுக்கு இன்பம் உண்டாகும் படி ஊடல் தீரும இனிய மொழியைப் பேசுபவளாயும் இருத்தல் வேண்டும் என்பதை,*

''கட்கினியாள், காதலன் காதல் வகைபுனைவாள்,
உட்குடையாள், ஊர்நாண் இயல்பினாள் – உட்கி
இடனறிந் தூடி இனிதின் உணரும்
மடமொழி மாதராள் பெண்'' (நாலடி.384)

*இப்பாடல் கூறுகிறது.*

**வறுமையிலும் விருந்தோம்பல் பண்பு**

*கற்புமிக்க மகளிரின் சிறந்த பண்பாய் விருந்தோம்பலையும் நாலடியார் கூறுகிறது. சங்க இலக்கியமும் விருந்தோம்பல் பண்பை, போற்றியதும் இங்கும் நினைவு கூறத்தக்கதாகும், ஒரு குடத்து நீரைக் காய்ச்சி அதை உண்டு வாழும் வறுமைத் துன்பம் ஏற்பட்ட போதும், கடல் நீரையே உண்ணத்தக்க முறையில் பெரும் சுற்றம் வந்தபோது, தன் கடமையான குணங்களை, அதாவது விருந்தோம்பலை ஒழுக்கமாகக் கொள்கின்ற பெண்ணே இல்வாழ்க்கைக்குத் தக்ககுணம் உடையவள் எனக் கூறுகிறது நாலடியார். இதனை,*

''குடநீரட் டுண்ணும் இடுக்கட் பொழுதும்
கடன ரறவுண்ணும் கேளிர் வரினும்
கடனீர்மை கையாறாக் கொள்ளு மடமொழி
மாதர் மனைமாட்சி யாள்'' (நாலடி. 382)

இப்பாடலால் அறியமுடிகிறது. வறிய நிலை அடைந்தாலும் பல சுற்றத்தார் வந்தாலும் விருந்தோம்பலில் தளராது தன் கடமையைச் செய்பவள் சிறந்த மனைவியாவாள் என்னும் கருத்து வெளிப்படுகிறது.

### பெண்ணுக்கு ஆகாத குணங்கள்

மனைவிக்கு ஆகாத குணங்கள் எனத் தனிப்பட்ட நடத்தை நெறி பற்றிய சிந்தனைகளையும் வாழ்வியல் சிந்தனைகளாக நாலடியார் கூறியுள்ளது.

"எறியென் றெதிர்நிற்பாள் கூற்றம்;; சிறுகாலை
அட்டில் புகாதாள் அரும்பிணி;– அட்டதனை
உண்டி யுதவாதாள் இல்வாழ்பேய் ; இம்மூவர்
கொண்டானைக் கொல்லும் படை" (நாலடி.363)

என்னும் பாடல் தன் கணவனுக்குச் சினத்தை மூட்டி அடி| என்று அவன் எதிரே நிற்பவள் இயமனாவாள். காலையில் அடுக்களைக்குச் சென்று உணவைச் சமைக்காதவள் தன் கணவனுக்கு ஒரு நோய் ஆவாள், சமைத்ததைக் கணவனுக்கு உணவாக இடாது உண்பவள் பேயாவாள். இந்த மூவகை இயல்புடைய மாதரும் தம்மை மணந்து கொண்ட கணவரை உயிருடன் வருத்தும் கருவி ஆவார் எனக் கூறுகிறது நாலடியார். இதன்மூலம் கணவனுக்குச் சினத்தை மூட்டுபவள் எமனைப் போன்றவளென்றும், கணவனுக்குக் காலையில் உணவு சமைக்காதவள் நோய்யென்றும், சமைத்ததைக் கணவனுக்குப் பரிமாறாமல் உண்பவள் பேயென்றும் சாடுவதால் இவை இல்லாத நல்ல குணங்களே பெண்ணுக்குச் சிறந்தவை என்று கூறுகிறது நாலடியார்.

### முடிவுரை

சிறந்த பெண்மைக்கான இலக்கணமாக இனிய இயற்கை அழகுடையவளாயும், கணவன் விரும்பும்படி தன்னை அலங்கரித்துக் கொள்பவளாகவும், அச்சம், நாணம் உடையவளாகவும், கணவனிடம் அஞ்சி ஒழுகுபவளாகவும், தக்கச் சமயமறிந்து கணவனோடு ஊடி, கூடி, ஊடல் தீர்ப்பவளாகவும் விளங்குதல் வேண்டும் என்கிறது நாலடியார். பெண்கள் தான் எவ்வளவு வறுமையில் இருந்தாலும் வந்த சுற்றத்தாரைப் பேணி விருந்தோம்புவளாக விளங்குதல் வேண்டும் எனவும் வலியுறுத்துவதைக் காணமுடிகிறது. பெண்ணுக்கு ஆகாத குணங்களாகக் மூன்று குணங்களையும் கணவனைத் தன்னுள்ளே வைத்துக் காத்த மனைவி பற்றியும் குறிப்பிடுகிறது. நாம் நாலடியார் உணர்த்தும் பெண்களின் நிலைக் குறித்து நோக்கும் பொழுது அன்றும் இன்றும் எக்காலத்திலும் பெண்கள் நிலை ஒரே நிலைப் பாட்டினைப் கொண்டிருப்பதை இவ்வாய்வில் காண்கிறோம்

### துணை நூற்பட்டியல்

1. சுப்பிரமணியன்.ச.வே. (ப.ஆ) பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள்,
2. பாலசுந்தரம் பிள்ளை தி.சு நாலடியார்
3. சிதம்பரனார், சாமி. பதினெண் கீழ்க்கணக்கும் தமிழர் வாழ்வு
4. நச்சினார்க்கினியர் தொல்காப்பியம், பொருளதிகாரம்
5. பரிமேலழகர் (உ.ஆ) திருக்குறள்,